

தமிழ்நாடு அரசு

இரண்டாம் வகுப்பு

பருவம் - II

தமிழ்

ENGLISH

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு - 2026

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

விற்பனைக்கு அன்று

உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்
© SCERT 2026

அச்சிட்டு வெளியிடுவோர்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

CHILD LINE 1098 NIGHT & DAY

அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?

14417
கல்வித் தகவல் மையம்

அழையுங்கள் 14417

உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

அணிந்துரை

குழந்தைப்பருவம் இயல்பாகவே வியப்புக்குரியதாகவும், எல்லையற்ற ஆர்வத்துடனும், கற்பனை ஆற்றல் உடையதாகவும், எதையும் கண்டறியும் ஆற்றலுடனும் நிரம்பி இருக்கும். இந்த இயல்பே கற்றல் அனுபவத்திற்கான முதல்படி. இதன் அடிப்படையில் மகிழ்ச்சியாகவும் பொருளுணர்ந்தும் ஈடுபாட்டுடனும் கற்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் 1முதல் 3ஆம் வகுப்புவரையிலான பாடநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025-இன் ஒரு பகுதியாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பாடநூல்கள், மாநிலத்தின் அடிப்படைக் கல்வியை வலுப்படுத்துவதில் முக்கியப்படியாக விளங்குகின்றன. **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரின்** தொலைநோக்குப் பார்வையும் வழிகாட்டுதலும், இக்கல்விக் கொள்கையின் முக்கியச் சிறப்புகளான குழந்தைமையக் கற்றல், திறன் அடிப்படையிலான கற்றல் மற்றும் உள்ளடங்கிய கற்றல் போன்றவை இப்பாடநூல்களில் வெளிப்படுவதை உறுதி செய்துள்ளன.

பள்ளிக் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர், பாடப்பொருள் அறிவுடன் 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை ஒருங்கிணைத்து இப்பாடநூல்களைக் கதைவழிக் கற்றல் அனுபவங்களாக உருவாக்குவதில் அளப்பரிய பங்காற்றியுள்ளார்.

மேலும், திறன் அடிப்படையிலான கற்றல் அணுகுமுறையானது கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டை, மனப்பாடம் செய்து கற்றல் என்ற நிலையிலிருந்து மாற்றி, ஆழமான கருத்தியல் புரிதல் மற்றும் பொருளுணர்ந்து பயன்படுத்துதல் என்ற நிலைக்கு மேம்படுத்தியுள்ளது. பண்புநலன்களை வளர்த்தெடுக்கும் விழுமியக் கல்வி, வாழ்வியல் திறன்கள், கலை மற்றும் உடல் இயக்கத் திறன்களோடு ஒருங்கிணைந்து குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

கலைத்திட்ட உயர்மட்ட வல்லுநர் குழுவின் உறுப்பினர்கள், கலைத்திட்ட வடிவமைப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தங்களின் நுட்பமான அறிவு மற்றும் கல்வி அனுபவத்தின் மூலம் இப்பாடநூல்களை வடிவமைத்துச் செம்மைப்படுத்துவதில் தொடர்ச்சியான வழிகாட்டுதலை வழங்கியுள்ளனர். இப்பாடநூலில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் பங்களிப்பும் இதில் அடங்கும்.

இத்தொடக்கநிலையில், கல்வியானது குழந்தைகளுக்கு வலுவான கற்றல் அடித்தளத்தை அமைப்பதோடு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் துணையாக நிற்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு இப்பாடநூல்கள், குழந்தைகள் பங்கேற்று, பொருளுணர்ந்து ஆழமாகக் கற்கும்வகையில் கீழ்க்காண் கூறுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.

- தன்னம்பிக்கையுடன் தம் கருத்தை வெளிப்படுத்த உதவும் பேசுதல் மற்றும் கேட்டலுக்கான வாய்ப்புகள்.
- தருக்கரீதியான சிந்தனை மற்றும் கருத்தியல் புரிதலை வலுப்படுத்தும் கற்றல் செயல்பாடுகள்.
- படித்தல் மற்றும் எழுதுதல் திறன் பெறுவதற்காகப் பாடத்துடன் ஒருங்கிணைத்து அளிக்கப்பட்டுள்ள பயிற்சிகள்.
- நுண்தசை மற்றும் உடலியக்கத் திறன்களை வளர்ப்பதற்கான வரைதல், வண்ணம் தீட்டுதல், வரியொற்றி எழுதுதல் மற்றும் விளையாட்டுச் செயல்பாடுகள்.
- தாமாகக் கற்பதற்கும் சுயமாகச் சிந்திப்பதற்குமான எளிய வாய்ப்புகள்.

விழுமியங்களையும் வாழ்வியல் திறன்களையும் பாடநூல்களில் ஒருங்கிணைத்து வழங்குவதன் மூலம் பரிவு, ஒத்துழைப்பு, பொறுப்புணர்வு மற்றும் தன்னம்பிக்கை போன்ற பண்புகளைக் குழந்தைகள் வளர்த்துக்கொள்ள உதவுகின்றன.

கற்றலானது மனப்பாடம் செய்வதைத் தாண்டி, புரிதல் மற்றும் பயன்பாட்டை நோக்கிய ஒரு திறன் அடிப்படையிலான அணுகுமுறையால் வழிநடத்தப்படுகிறது. மதிப்பீடானது கற்றல் செயல்முறையிலேயே ஒன்றிணைக்கப்பட்டு, தொடர்ச்சியானதாக, பொருளுள்ளதாக, கற்றலுக்குத் துணைபுரிவதாக அமைந்துள்ளது.

இப்பாடநூல்கள், கற்றல் பயணத்தின் வழித்துணை. ஆராயவும், சிந்திக்கவும், தன்னை வெளிப்படுத்தவும் குழந்தைகளுக்கு இவை தளம் அமைத்துக் கொடுக்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் மகிழ்ச்சியுடன் கற்பதையும், தன்னம்பிக்கையுடன் வளர்வதையும் வலுவான எதிர்காலத்திற்கு அடித்தளமிடுவதையும் உறுதிசெய்யும் ஒட்டுமொத்தப் பொறுப்புணர்வின் வெளிப்பாடாக இப்பாடநூல்கள் விளங்குகின்றன. **"உள்ளடங்கிய, சமவாய்ப்பு மற்றும் எதிர்கால ஆயத்தத்தை உறுதிசெய்யும் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட கல்வி"** என்ற தொலைநோக்குப் பார்வையை இப்பாடநூல்கள் முன்னெடுத்துச் செல்கின்றன.

இயக்குநர்
மாநிலக் கல்வியியல்
ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
தமிழ்நாடு

இந்திய அரசமைப்பு

முகப்புரை

இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்,

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல், நீதி;
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை;
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்

தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய். நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது. அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன. இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!



தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும். பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!



தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.



உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

> *தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! – இன்பத்*
> *தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்! –* பாவேந்தர் பாரதிதாசன்.

தமிழ்நாட்டின் தனித்துவப் பண்பாடு, மொழி மற்றும் சமூக மரபை முன்னிறுத்தி தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை 2025 உருவாக்கப்பட்டுள்ளது. இது குழந்தைகளுக்கான கட்டாயத் தேவையாக, முக்கியமான ஒற்றைக்கூறாக அடிப்படை எழுத்தறிவைக் குறிப்பிடுகிறது; தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குழந்தையும் வயதுக்கு ஏற்ற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் உள்ளிட்ட வாழ்நாள் முழுமைக்குமான அடிப்படை மொழித்திறன்கள் பெறுவதை வலியுறுத்துகிறது. அனைத்துப் பாடங்களையும் கற்பதற்கான அடித்தளமாக மொழிப்பாடம் அமைவதால் குழந்தைகளின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறியவும், மேம்படுத்தவும், சமூகத்தோடு இயைந்து வாழவும் வழிகாட்டும் வகையில் இப்பாடநூல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

துறுதுறுப்பும் எதையும் தேடித் துருவி அறிந்துகொள்ளும் குழந்தைகளின் இயல்புணர்ந்து அவர்களுக்குப் பிடித்தமான/நெருக்கமான மற்றும் அறிமுகமானவற்றைக் கொண்டே இந்நூலில் பாடங்கள், பயிற்சிகள், மொழி விளையாட்டுகள் போன்றவை பின்வருமாறு அளிக்கப்பட்டுள்ளன.



பாடக்கட்டமைப்பு

ஒவ்வொரு பாடமும் சிந்தனையைத் தூண்டும் வினாவுடன் தொடங்குகிறது. அந்த வினாவிற்கான விடைகளைக் குழந்தைகள் தாமாகவே தேடி அறியும் அணுகுமுறையில் பாடம் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால், மீளப்படித்தலும் பொருளுணர் திறனும் வலுப்பெறுகின்றன. குழந்தைகள் பெற வேண்டிய **கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்** ஆகிய அடிப்படை மொழித்திறன்களுக்கான பாடங்கள் பின்வருமாறு பாடநூலுள் அளிக்கப்பட்டுள்ளன.

பாடங்கள்

கனவுப் பயணம் – முதல் பருவத்தின் மொழிப்பாடத் திறன்களை நினைவுகூர்தல்.

சிறிய வாத்து – படக்கதையைப் படித்தல், சூழல்களை எதிர்கொள்ளும் வாழ்வியல் திறனைப் பெறுவதற்கான பாடம்.

குருவி – பாடலைக் கேட்டுப் புரிந்துகொண்டு பின்தொடர்ந்தும் உருவாக்கியும் பாடும் திறன்பெற உதவும் பாடல்.

செடிகளின் கோபம் – தொடர்களைப் படித்துப் புரிந்துகொள்ளவும் விழுமியங்களை உணர்ந்து பின்பற்றவும் உதவும் பாடம்.

அடிப்படைத் திறன்களை வளர்க்கும் பயிற்சிச் செயல்பாடுகள்

1
அலகு 1
2

கேட்டல், பேசுதல்
கேட்டதைப் புரிந்துகொண்டு தம் மொழிநடையில் பேசுதல்

படித்தல்
பொருள்புரிந்தும் விரைந்தும் ஆர்வத்துடன் தேடிப் படித்தல்

3
அலகு 2
4

எழுதுதல்
எழுத்துவழிப் படைப்பாற்றலை வெளிப்படுத்துதல்

பாடநூலில் கற்றவற்றை உறுதிப்படுத்தும் மதிப்பீடு

- கற்றவற்றை மீண்டும் நினைவுகூரும் பகுதி – திரும்பிப் பார்க்கலாம்
- கற்றல் விளைவுகளை மதிப்பிடும் பகுதி (சிந்தித்து விடையளித்தல், கதை கூறுதல், பாடல் பாடுதல்) – கற்றல் பயணம்
- குழந்தைகள் தாம் கற்றதை அறியும் பகுதி – நான் கற்றவை
- ஒவ்வோர் அலகிற்குமான வளரறி மதிப்பீடு – நானே செய்வேன்

ஆசிரியர் கையேடு



ஒலிவடிவில் பாடங்கள், காணொலி வடிவில் அசைவூட்டக் காட்சிகள், மின்னுரு பாடப்பொருள் (Digital content), மின்னூல் (e – Book), உள்ளடங்கிய மின்னூல் (i – Book) குழந்தைகளின் பாடம் சார்ந்த ஆர்வத்தைக் கூர்தீட்டும் வகையில் அளிக்கப்பட்டுள்ளன. இவை தன்னம்பிக்கையுடன் மொழியைப் பேச, படிக்க, எழுத, படைக்க வழிகாட்டும்.



நிறைவாக, ஒவ்வொரு குழந்தையும் வாழ்நாள் முழுமைக்குமான வலுவான, நிரந்தரமான கல்வி அடித்தளத்தைப் பெறுவதோடு, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் சமவாய்ப்பினைப் பெற்று, அடிப்படை எழுத்தறிவு என்னும் இலக்கினை அடைவதையே இப்பாடநூல் எதிர்நோக்குகிறது.

பொருளடக்கம்

அலகு	தலைப்பு	பக்க எண்
1	1. கனவுப் பயணம்	1
	2. சிறிய வாத்து	12
2	3. குருவி	34
	4. செடிகளின் கோபம்	39

HT6PX
மின்னூல்

UJ1SB
உள்ளடங்கிய மின்னூல்

ZO7LB
ஆசிரியர் கையேடு

QX3LB
மதிப்பீடு



அலகு
1

1. கனவுப் பயணம்

மாறன், ஒரு காட்டில் நின்றான். சுற்றும் முற்றும் பார்த்தான். அங்கே ஒரு கழுகு வந்தது.

நம்மைப் பற்றி எழுதலாம்.



என் பெயர் : மாறன்

என் ஊர் : கடலூர்

அம்மாவின் பெயர் : மல்லிகா

அப்பாவின் பெயர் : கௌதமன்

அலைபேசி எண் : 98765 43210

என் பெயர் : .....

என் ஊர் : .....

அம்மாவின் பெயர் : .....

அப்பாவின் பெயர் : .....

அலைபேசி எண் : .....

குறிப்பு

மாறன் எழுதுகிறான். நீங்களும் எழுதுங்களேன்.

பிடித்ததைப் பேசலாம்.





























குறிப்பு

மாறன் தனக்குப் பிடித்தவற்றைப் பற்றிப் பேசுகிறான். நீங்களும் பேசுங்களேன்.

கழுகு, மாறனின் வருத்தத்தைப் போக்க நினைத்தது. மாறனின் விருப்பங்களைக் கேட்டது. மாறன், பாட்டாகப் பாடி விடை அளித்தான். நீங்களும் பாடுங்கள்.



பாடலாம்! ஆடலாம்!



சின்னகுட்டி செல்லக்குட்டி



சின்னகுட்டி செல்லக்குட்டி
என்ன வேண்டும்?
குட்டி எறும்பின் வீட்டுக்குள்ளே
செல்ல வேண்டும்!

சின்னகுட்டி செல்லக்குட்டி
என்ன வேண்டும்?
குருவி கட்டும் கூட்டுக்குள்ளே
தூங்க வேண்டும்!

சின்னகுட்டி செல்லக்குட்டி
என்ன வேண்டும்?
தாளில் செய்த கப்பலேறிச்
சுற்ற வேண்டும்!

சின்னகுட்டி செல்லக்குட்டி
என்ன வேண்டும்?
பட்டாம்பூச்சி முதுகில் ஏறிப்
பறக்க வேண்டும்!

சின்னகுட்டி செல்லக்குட்டி
என்ன வேண்டும்?
எப்போதுமே அன்பு காட்டும்
நண்பர் வேண்டும்!



குறிப்பு

ஆசிரியர் கையேட்டில் உள்ள பாடல் உத்திகளைப் பயன்படுத்திப் பாட வேண்டும்.



இத்துடன் என் எல்லை முடிந்துவிட்டது. இனி, இக்குதிரை உனக்கு உதவும்.

சரி





வருத்தப்படாதே! ஒரு சிறிய விளையாட்டு விளையாடிவிட்டுச் செல்லலாமா?



விளையாடலாம்.





குறிப்பு

'அழு' என்றால் சிரிக்கவும் 'சிரி' என்றால் அழவும் வேண்டும். மாற்றிச் செய்யாதவர் வெளியேற வேண்டும். இவ்வாறு, வெவ்வேறு சொற்களைத் தொடர்ந்துகூறி விளையாடுங்கள். (நில் - உட்கார், நட - ஓடு...)

படிக்கலாம்; எழுதலாம்.



கடுகு வானூர்தி வடிகட்டி தூண் காற்று
செங்கல் துண்டு மெழுகு சேவல் மேளம்

குறில்		நெடில்	
_____	_____	_____	_____
_____	_____	_____	_____
_____		_____	

இது மந்திரக் கதவு. சரியாக எழுதினால்தான் கதவு திறக்கும்.

குறிப்பு

குறில், நெடில் உணர்ந்து ஒலித்துக்கொண்டே எழுத வேண்டும்.



காட்டாறு வந்துவிட்டது. இனி, எனது நண்பன் மீன் உதவும்.



தொடர்புடையதைப் பொருத்துகிறேன். உதவுகிறாயா?



சரி



படங்களுடன் தொடர்புடையதைப் பொருத்தலாம்.







தேனீ | எறும்பு | கோழி | மீன் | செங்கல் | புல்







ஒருமை, பன்மை அறிந்து எழுதலாம்.





வழியில் பார்ப்பதை எழுதிக் கொண்டே வா.

சரி







எழுதிய சொற்களைச் சொற்கோபுரத்தில் நிரப்பினால் வழி கிடைக்கும். அதன்பின், ஆமை அழைத்துச் செல்லும்.

பொருத்தமாக நிரப்பலாம்.





எழுதிய சொற்கள்

- ஈ
- மான்கள்
- மயில்
- முயல்கள்
- யானை
- சிங்கங்கள்



பசிக்கிறது.

பெயர்ப்பலகையில் உள்ள உணவுகளின் பெயர்களைக் கண்டுபிடித்தால் சாப்பிடலாம்.



கண்டுபிடிக்கலாம்; எழுதலாம்.



சிறுவர் புத்தகத்தில் இருக்கும் கதையைப் படிக்கிறாயா?

கதை படிக்கலாம்.

இப்பொழுது இல்லையே!



சிறுவர் புத்தகத்தில் உள்ள சுவைகளைப் பொருத்த உதவுகிறாயா?





சுவைகள் அறியலாம்.



வெல்லம்

இனிப்பு



பச்சை மிளகாய்

கார்ப்பு



பாகற்காய்

கசப்பு



பாக்கு

துவர்ப்பு



உப்பு

உவர்ப்பு



புளியங்காய்

புளிப்பு

பொருத்தலாம்.



மிளகு கார்க்கும்.

வேப்பிலை கசக்கும்.





எலுமிச்சை புளிக்கும்.

தேன் இனிக்கும்.





உப்பு உவர்க்கும்.

வாழைப்பூ துவர்க்கும்.



மகிழ் பக்கத்தையும் செய்துவிட்டுச் செல்லலாம்.



வரையலாம்; வழிகாட்டலாம்.



மகிழ் பக்கம்



MF1QA

வரையலாம்.

























சிறுமி, துணியை எடுக்கக் கோடிட்டு வழிகாட்டலாம்.






கடுகு வானூர்தி வடிகட்டி தூண் காற்று
செங்கல் துண்டு மெழுகு சேவல் மேளம்
குறில்
நெடில்
தம்பி! தம்பி! கீழே இறங்கு.
அட, நான் கண்டதெல்லாம் கனவா?



மாறனுக்கு உதவலாமா?

மாறனின் உறவினர்கள் இருந்த கடை.

அப்பா : பழமுதிர்ச் சோலை

அம்மா : .....

தாத்தா : .....

பாட்டி : .....

அண்ணன் : .....

நான் கற்றவை



1. தன்னைப் பற்றித் தம் மொழிநடையில் பேச முடியும். ☐ ☆☆☆
2. பொருள்புரிந்து சொற்களைப் படிக்க முடியும். ☐ ☆☆☆
3. விதிமுறைகளைப் புரிந்துகொண்டு செயல்பட முடியும். ☐ ☆☆☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

2. சிறிய வாத்து



ஒரு பெரிய ஏரி இருந்தது. பகலில், மீன்கள் துள்ளும். தவளைகள் தாவும். தும்பிகள் பறக்கும். வாத்துகள் நீந்தி விளையாடும். வண்டுகளும் பூச்சிகளும் சத்தமிடும். இரவில் அனைத்தும் ஓய்வெடுக்கும். அமைதியாக இருக்கும். ஒருநாள் நள்ளிரவில் திடீரென வாத்துகள் பயந்து சிதறி ஓடின. ஏரிக்கரையே பரபரப்பாக மாறியது.

வாத்துகள் பயந்து ஓடும் அளவிற்கு என்ன நடந்திருக்கும்?

குறிப்பு *எல்லோரும் கூறும் விடைகள் பாடத்திற்குள் உள்ளனவா? படித்துப் பார்க்கலாமா?*

ஆறு வாத்துகள் இருந்தன.
ஐந்தின் நிறம் வெள்ளை.
ஒன்றின் நிறம் பழுப்பு.
அது அளவில் சிறியது.

வெள்ளை வாத்துகள் எல்லாம்
சேர்ந்தே ஏரியில் விளையாடும்.
பழுப்பு வாத்தை ஒதுக்கி வைக்கும்.
பழுப்பு வாத்து மட்டும்
தனியாகவே சுற்றித் திரியும்.

ஆழமான பகுதி எங்கே?
அதிகமான மீன்கள் எங்கே?
அடர்ந்த புதருக்கு வழி எங்கே?
எல்லாம் அதற்குத் தெரியும்.





ஒரு நாள்,
நள்ளிரவில் ஓர் உருவம்
பதுங்கிப் பதுங்கி வாத்துகளிடம் வந்தது.
கண்விழித்துப் பார்த்தன வாத்துகள்.
முகத்தின் முன்னால் நரியின் கோரைப்பற்கள்.

குவாக்... குவாக்...
கத்திக்கொண்டே வாத்துகள் பயந்து ஓடின.
நரியும் விடாமல் துரத்தியது.

விரைந்து வந்த பழுப்பு வாத்து,
என் பின்னால் வாருங்கள் என்றது.
நீரில் பாய்ந்து சென்றது.
அதன் பின்னே அனைத்தும் சென்றன.

அங்கும் இங்கும் போக்குக் காட்டிப்
புதருக்குள் சென்று மறைந்தன.
நரியும் தேடி ஓடியே
சோர்ந்து ஏமாந்து திரும்பியது.



வாத்துகள் வெளியே வந்தன.
மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தன.
நண்பா! என்றே அழைத்தன.
ஒதுக்கியது தவறு என உணர்ந்தன.
ஒன்றாய்ச் சேர்ந்தே மகிழ்ந்தன.





செய்கை விளையாட்டு





- குவாக்... குவாக்... வாத்து என்று சொல்வேன்; வாத்து போல் நடப்பேன்.



- நரி... நரி... பதுங்கும் நரி என்று சொல்வேன்; பதுங்கிப் பதுங்கிச் செல்வேன்.

செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டு / ஒலிப்பதிவைக் கேட்டுப் பின்தொடர்ந்து படிக்கலாம்.

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



என் சொற்கள்

1. _____ 2. _____

3. _____ 4. _____

5. _____ 6. _____

★ சொற்கள்



- எழுதிய சொற்களை ஆசிரியரிடம் கூறுக.
- ஒரு சொல்லை ஒருவருக்குமேல் எழுதி இருந்தால் அது ★ சொல்.

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



எனக்குப் பிடித்த தொடர் :

_____

4. பேசலாம்.

நான் விரும்பிச் செய்பவை...



குறிப்பு

விடுமுறை நாள்களில் குழந்தைகள் விரும்பிச் செய்பவை குறித்துப் பேச வேண்டும்.

5. படித்து விடை எழுதுக.

படித்தல் பலகை

ஆறு	பற்கள்	சிறியது	ஒருநாள்	வாத்துகள்
நிறம்	மீன்கள்	ஆழமான	சென்றது	மறைந்தன
பயந்து	பதுங்கி	வெள்ளை	முன்னால்	நள்ளிரவில்

1. உரிய நெடில் எழுத்து உள்ள சொற்கள் :

ந	ஒருநாள்	ன	
ம		வ	

2. 'வில்' - இடம்பெற்றுள்ள சொல் : _____

3. பன்மைச் சொற்கள் : _____ , _____

சொற்களை விரைந்து படிப்பேன்; வண்ணமிடுவேன்.

6. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.



சிறிய வாத்து

ஆறு வாத்துகள் இருந்தன.

சிறிய வாத்தை ஒதுக்கின.

தனியாய் இருந்த வாத்துமே

அனைத்து இடமும் அறிந்தது.

இரவில் நரி வந்தது.

வாத்துகள் ஐந்தும் பயந்தன.

சிறிய வாத்து உதவவே

அனைத்தும் மறைந்து தப்பின.

ஒதுக்கியது தவறு என உணர்ந்தன.

ஒன்றாய்ச் சேர்ந்தே மகிழ்ந்தன.





வாத்துகள் பயப்படக் காரணம் எது? ✓ குறியிடுக.

அ) மழை வந்தது. ☐ ஆ) நரி வந்தது. ☐ இ) தனியாக இருந்தன. ☐

7. சொல்வதை எழுதுக.





குறிப்பு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக்கேட்டு எழுத வேண்டும்.

8. சொல்லைக் கண்டுபிடிக்க.



1. பட்டம் பறந்தது
   மாடியில் செடி

படி

4. மல்லிகை மணம்
   இரவில் கரடி
   ஓடும் மேகம்

மரம்

2. குளத்தில் குருவி
   காடை முட்டை

5. முதல் முட்டை
   வயலில் கயல்
   குயில் பாடல்

3. சிறிய சிலந்தி
   நரியுடன் கீரி

6. மின்னல் மின்னியது
   மேள தாளம்
   தேக்குமரப் படகு

9. படிக்க.







புறா அரிசியைக் கண்டது.

நண்பர்களை அழைத்தது.

அனைத்தும் வந்தன.

கொத்தித் தின்றன.

பசி தீர்ந்தது.

மகிழ்ச்சியாகப் பறந்தன.









10. பெயர், செயல் அறிவோம்.

வாத்துகள் தூங்கின.

நரி வந்தது.

வாத்துகள் ஓடின.

நரி துரத்தியது.

வாத்துகள் ஒளிந்தன.

நரி ஏமாந்தது.



வாத்துகள் தூங்கின.	நரி வந்தது.	வாத்துகள் ஓடின.
பெயர் : வாத்துகள்	பெயர் : நரி	பெயர் : வாத்துகள்
செயல் : தூங்கின	செயல் : வந்தது	செயல் : ஓடின

நரி துரத்தியது.	வாத்துகள் ஒளிந்தன.	நரி ஏமாந்தது.
பெயர் : நரி	பெயர் : வாத்துகள்	பெயர் : நரி
செயல் : துரத்தியது	செயல் : ஒளிந்தன	செயல் : ஏமாந்தது

பெயர், செயல் – எழுதுக.

	பெயர்	செயல்
குரங்கு அழைத்தது.	குரங்கு	அழைத்தது
கரடி வந்தது.		
தேன்கூடு பார்த்தது.		
தேன் எடுத்தன.		

பெயர்	செயல்	தொடர் உருவாக்கி எழுதுக.
ஊஞ்சல்	ஊற்றலாம்	ஊஞ்சல் ஆடலாம்.
பழம்	ஓட்டலாம்	
தண்ணீர்	ஆடலாம்	
கதை	பறிக்கலாம்	
மிதிவண்டி	படிக்கலாம்	

11. கேட்டு விடை கூறுக.

சிந்து, பள்ளியின் வாயிலில் நின்று இருந்தாள். அப்போது, முன்பின் தெரியாத ஒருவர் வந்தார். "பாப்பா, உன் அம்மா அழைத்து வரச் சொன்னார். என்னுடன் வா!" என்றார். "சிறிதுநேரம் காத்திருங்கள்" என்று பள்ளிக்குள் ஓடினாள். ஆசிரியரிடம் நடந்ததைச் சொன்னாள். ஆசிரியர் வெளியே வந்து அழைத்தவரிடம் பேசினார். ஆசிரியருக்கும் ஐயம் வந்தது. "சிந்துவின் பெற்றோரிடம் அலைபேசியில் கேட்கிறேன்" என்றார். உடனே, அழைத்தவர் வேகமாகச் சென்றுவிட்டார். ஆசிரியர் சிந்துவைப் பாராட்டினார். "முன்பின் தெரியாதவர்களுடன் செல்லக்கூடாது; முதலில் ஆசிரியரிடமோ பெற்றோரிடமோ சொல்ல வேண்டும்" என்றார். அலைபேசியில் காவல்நிலையத்திற்குத் தகவல் சொன்னார். சிந்துவின் நண்பர்கள், "இனி நாமும் பாதுகாப்பாக இருக்க வேண்டும்" எனத் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

தெரியாத ஒருவர் அழைத்ததும் சிந்து, ஆசிரியரிடம் ஏன் கூறினாள்?

12. பேசலாம்; எழுதலாம்.



பெரிய பெரிய இராட்டினம்
ஏறிச் சுற்ற ஆசை

இனிக்கும் இனிக்கும் பழச்சாறு
வாங்கிக் குடிக்க ஆசை

வட்ட வட்ட அப்பளம்

வண்ண வண்ண பலூன்கள்

13. தமிழ் மாதங்கள் அறிவோம்.

படிக்கலாம்: நிரப்பலாம்.



சித்திரை

வைகாசி

ஆனி

ஆடி

ஆவணி

புரட்டாசி

ஐப்பசி

கார்த்திகை

மார்கழி

தை

மாசி

பங்குனி

உயிரெழுத்தில் தொடங்கும் மாதங்கள்

'சி' எழுத்தில் முடியும் மாதங்கள்

இரண்டு மெய் எழுத்து உள்ள மாதம்

ஓரெழுத்து மட்டும் உள்ள மாதம்

உறவுப்பெயர் உள்ள மாதம்

14. படத்திற்குப் பொருந்தாத தொடர் எது? ✓ செய்க.



அ) மரத்தின் மீது காகம் உள்ளது. ☐

ஆ) குழந்தைகள் பம்பரம் விளையாடுகிறார்கள். ☐

இ) இரண்டு வீடுகள் உள்ளன. ☐

15. பின்பற்றி எழுதுக.



குயில் — கறுப்பு — பறக்க — பழம்

நான்தான் **குயில்**.

என் நிறம் **கறுப்பு**.

என்னால் **பறக்க** முடியும்.

எனக்குப் **பழம்** பிடிக்கும்.



மீன் — மஞ்சள் — நீந்த — புழு

16. நீங்கள் என்ன செய்வீர்கள் ✓ செய்க. காரணம் கூறுக.



1. நேற்று ஒரு நண்பர் உங்களிடம் சண்டையிட்டார். இப்போது உங்களுடன் பேச வருகிறார்.

அ) பேசுவேன். ☐

ஆ) பேச மாட்டேன். ☐

இ) நானும் சண்டையிடுவேன். ☐

2. ஒருவர் உங்களைக் கேலி செய்கிறார்.

அ) கோபப்படுவேன். ☐

ஆ) கேலி செய்யாதீர்கள் எனச் சொல்வேன். ☐

இ) அழுவேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

17. சொல்லிப் பழகுக.





சோளக்கதிரைத் தின்று
துள்ளிச் செல்லுது கன்று

மண்ணில் முளைத்த மாமரம்
மாமரம் தந்த மாம்பழம்

18. படைப்பு நேரம்.



- நரி மீண்டும் வந்தால் என்ன நடக்கும் என்பதைக் கதையாகத் தொடர்ந்து கூறச் செய்யலாம்.
- நரியும் வாத்துகளும் நட்போடு பேசியிருந்தால் என்ன பேசியிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பேசலாம்.



19. செயல்திட்டம்.



வீட்டில் கேட்டுவந்து பகிர்தல்.



- தன் பாதுகாப்பு, பொருள்களைப் பாதுகாத்தல், சாலையில் பாதுகாப்பாகச் செல்லுதல், உடல் தூய்மை பேணுதல் – இவை போன்ற ஏதேனும் ஒரு தகவலை வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டுவந்து பகிர வேண்டும்.

கற்றல் பயணம்



பெயர், செயலை எடுத்து உரிய இடத்தில் எழுதுக.

சென்றது	பாபு	ரோஜா	எடுத்தான்	சீப்பு	வந்தாள்	ஓடியது	கரடி

பெயர்	செயல்
....., ...	....., ...
....., ...	....., ...

நான் கற்றவை





1. கேட்டும் தொடர்களைப் படித்தும் கதையைத் தொடர்ந்து கூற முடியும். ☐ ☆☆☆
2. தொடர்களில் உள்ள பெயர், வினைச் சொற்களை அறிந்து படிக்க முடியும். ☐ ☆☆☆
3. சொற்களைச் சொல்லக் கேட்டு எழுத முடியும். ☐ ☆☆☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.



மகிழ் பக்கம்



உரிய படத்தை வரைந்து வண்ணம் தீட்டலாம்.



பிடித்ததைச் செய்து மகிழலாம்.











திரும்பிப் பார்க்கலாம்





படம் பார்த்துக் கதையாகக் கூறுங்கள்.

DE6LR

கதை முடிவில் பாபு என்ன செய்திருப்பான்?











தமிழ் மாதங்களைப் படித்து விடை எழுதுங்கள்.

சித்திரை	வைகாசி	ஆனி	ஆடி	ஆவணி	புரட்டாசி
ஐப்பசி	கார்த்திகை	மார்கழி	தை	மாசி	பங்குனி

1. ஆவணிக்கு அடுத்த மாதம் : _____.

2. 'பசி' என்ற சொல் உள்ள மாதம் : _____.

3. 'கை' என்ற சொல் உள்ள மாதம் : _____.

4. 'திரை' என்ற சொல் உள்ள மாதம் : _____.



படித்து நிரப்புங்கள்.

பேருந்து செல்கிறது.	கதவு திறக்கிறது.	மழை பெய்கிறது.
செயல்	பெயர்	செயல்
செல்கிறது	கதவு	
கலா சிரிக்கிறாள்.	அத்தை வருகிறார்.	புறா பறக்கிறது.
செயல்	பெயர்	பெயர்



பொருத்தமானதை நிரப்புங்கள்.

செழியன் வந்தான்.

செடியைப் பார்த்தான்.

செம்பருத்தி பறித்தான்.



பட்டு வந்தாள்.

_____ செய்தாள்.

பறக்க விட்டாள்.





மாலா வந்தாள்.

மாடிக்குச் சென்றாள்.

_____ பறித்தாள்.



நானும் படிப்பேன்: வண்ணமிடுவேன்



குநுசுஞுடுணுதுநுபுமுயுருலுவுழுளுறுனு

னு	து	ரு	யு	மு	பு
நு	ளு	வு	லு	கு	ணு
ஞு	சு	ழு	ங	று	டு





மாவு	பந்து	மண்புழு	கங்காரு
குளம்	தும்பி	சுண்டல்	முறுக்கு
வண்டு	கரும்பு	குரங்கு	மகிழ்ந்து
உறவு	எரிவாயு	புத்தகம்	கற்கண்டு

குரங்கு

தாவும் குரங்கு

குதித்துத் தாவும் குரங்கு

மரத்தில் குதித்துத் தாவும் குரங்கு



புழு புழு மண்புழு.
குடம் குடம் தண்ணீர்க்குடம்.
பன்றி பன்றி முள்ளம்பன்றி.
முயல் முயல் தாவும் முயல்.

புல்லில் வண்டு அமர்ந்தது.
இன்று காற்று வீசுகிறது.
குருவி வானில் பறந்தது.
சுறா, கடலில் நீந்தியது.









நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



கூ
நூ
சூ
லூ
டூ
ணூ
தூ
நூ
பூ
மூ
யூ
ரூ
லூ
வூ
மூ
ளூ
றூ
னூ



தூ சூ மூ னூ நூ நூ
ளூ னூ றூ கூ வூ ரூ
டூ யூ மூ பூ லூ ணூ



கூடு பூண்டு மூங்கில் சூறாவளி
நூறு கூட்டு வானூர்தி எண்ணூர்
பூட்டு சிற்றூர் சூரியன் பூங்காற்று
பூங்கா கூடாரம் தூண்டில் நூல்கண்டு

நூலகம்
வீட்டு நூலகம்
நண்பன் வீட்டு நூலகம்
எங்கள் நண்பன் வீட்டு நூலகம்



ஊசி ஊசி குண்டூசி.
கல் கல் கூழாங்கல்.
நூல் நூல் பட்டுநூல்.
கூடு கூடு குருவிக்கூடு.

கதவில் பூட்டிய பூட்டு.
தூணில் இருந்த தும்பி.
தூளியில் ஆடும் பாப்பா.
பூங்காவில் சுற்றும் வண்டு.



நானே செய்வேன்

1. கேட்டு விடை கூறுக.

அகிலன், முபாரக் இருவரும் நண்பர்கள். இருவரும் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது வானம் இருண்டது. கருமேகங்கள் வேகமாக நகர்ந்தன. காற்று வேகமாக வீசத் தொடங்கியது; மின்னல் மின்னியது. அதைத் தொடர்ந்து டமார்... டமார்... என இடிச் சத்தம் கேட்டது. அகிலனும் முபாரக்கும் உடனே வீட்டிற்குள் சென்றனர். அங்கிருந்து வெளியில் எட்டிப் பார்த்தனர். சடசட என மழை பெய்தது. மழையில் நனைய வேண்டும் என அகிலனும் முபாரக்கும் ஆசைப்பட்டனர். அகிலன் தன் அப்பாவிடம், "மழையில் நனையட்டுமா?" எனக் கேட்டான். "இடி, மின்னலுடன் மழை பெய்யும்போது வெளியே செல்லக்கூடாது. இடி தாக்க வாய்ப்பு உள்ளது" என்றார் அப்பா.

மழை பெய்வதற்கு முன் வானில் என்னென்ன நிகழ்வுகள் நடந்தன?

2. படித்துக்காட்டுக.



3. படித்து விடை எழுதுக.

1. எழுத்துகளை முறைப்படுத்திச் சொல்லை எழுதுக.

து வா த் _____ க மீ ன் ள் _____

2. இரண்டு சொல்லிலும் வரும் ஒரே எழுத்தை எழுதுக.

காற்று _____ பூங்கா தவளை _____ வண்டி

3. பெயர், செயலை எடுத்து எழுதுக.

மான் ஓடியது.

பெயர் : _____

மாமா வந்தார்.

செயல் : _____

4. தொடருக்கு உரிய படத்திற்கு ✓ செய்க.

நரி ஏமாந்து திரும்பியது.

 ☐

 ☐

5. படித்து விடையளிக்க.

ஆறு வாத்துகள் இருந்தன.

ஐந்தின் நிறம் வெள்ளை.

ஒன்றின் நிறம் பழுப்பு.

சரியா ✓ தவறா X குறியிடுக.

ஆறு வாத்துகளும் ஒரே நிறத்தில் இல்லை. ☐

அலகு 2

3. குருவி



குருவி! குருவி! அருகில் வா!
குறுநொய் தருவேன் வாங்கிப் போ!

நெல்லைப் போன்ற உன் மூக்கும்,
நெல்லிக் காய்போல் உன் தலையும்,

கொய்யாப் பிஞ்சைப் போல் உடலும்,
குழந்தை இடத்தில் காட்ட வா!

சுறுசுறுப்புப் பிள்ளை நீ!
சோம்பல் என்றும் இல்லையே!

பறந்து பறந்து செல்லுவாய்!
பாட்டு ஒன்று சொல்லுவாய்!

– பெருஞ்சித்திரனார்.



செய்து பழகலாம்

1. பாடலில் அடிக்கோடிட்டு எழுதுக.

'கு' – எழுத்தில் தொடங்கும் சொற்கள் :

கு | குருவி | | |

2. பாடலில் உள்ளதைக் கோடிட்டுப் பொருத்துக.

நெல்	உடல்
நெல்லிக்காய்	மூக்கு
கொய்யாப்பிஞ்சு	தலை



3. நிரப்புக; பெயர்களைப் படித்துக்காட்டுக.





மீ		ல்	
ன்		யி	ல்
	க்		
த்		ரு	
தி		வி	







4. குருவிகளைக் கண்டுபிடித்து வண்ணம் தீட்டுக.



5. என்ன பேசியிருப்பார்கள்? எடுத்து எழுதுக.



என்னால் ஓட முடியும்.

என்னால் பறக்க முடியும்.

6. கதை படிக்கலாம்.

இப்படிச் செய்வேன்









கதைக்குப் பொருத்தமான வரியைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

சுறுசுறுப்புப் பிள்ளை நீ!

பறந்து பறந்து செல்லுவாய்!

குருவி! குருவி! அருகில் வா!

7. படைப்பு நேரம்.



தொடர்ந்து உருவாக்கிப் பாடலாம்.





களிமண் எடுப்பேன் களிமண் எடுப்பேன்!
எடுத்த மண்ணில் சொப்பு செய்வேன்!

களிமண் எடுப்பேன் களிமண் எடுப்பேன்!
எடுத்த மண்ணில் தட்டு செய்வேன்!

கற்றல் பயணம்





தேர்ந்தெடுத்து நிரப்புக.

என் தோட்டம்

தோட்டம் சென்றேன்.
மரங்கள் பார்த்தேன்.
பழங்கள் பறித்தேன்.

தோட்டம் சென்றேன்.
கொடிகள் பார்த்தேன்.
காய்கள் பறித்தேன்.

தோட்டம் சென்றேன்.
செடிகள் பார்த்தேன்.

_____
பூக்கள் இல்லை. / பூக்கள் பறித்தேன்.

நான் கற்றவை





1. பாடலின் ஒலிநயத்தைப் புரிந்து இணைந்து பாட முடியும். ☐ ☆☆☆
2. பாடலைத் தொடர்ந்து உருவாக்கிப் பாட முடியும். ☐ ☆☆☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

4. செடிகளின் கோபம்



செடிகள், குழந்தைகளின் நண்பர்கள்ஆகிவிட்டன.

நாளைக்குத் தண்ணீர் ஊற்ற என்னுடன் யார் யார் வருகிறீர்கள்?

நாங்கள் வருகிறோம் ஐயா.

ஒருநாள் பள்ளி முடியும் நேரம்.

அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லையா? உடனே ஊருக்கு வருகிறேன்.

நலமாகிவிட்டார். நாளை வீட்டிற்குச் செல்லலாம்.

நன்றி!

நான்கு நாள்கள் கழித்து ஆசிரியர் பள்ளி திரும்பும்போது ...

ஐயோ! செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றச்சொல்ல மறந்தேனே!


வாடியிருக்குமோ?
பூ, பூக்கும் பருவம். என்ன ஆனதோ?
காய்ந்து இருக்குமோ?
அடடா, மகிழ்ச்சியான செடிகள்!
செடிகளுக்கு யார் தண்ணீர் ஊற்றினீர்கள்?
நீங்கள் சொல்லாமல் போனதால் முதல்நாள் எல்லாருமே தண்ணீர் ஊற்ற வந்தோம்.
பிறகு, ஒரு நாளைக்கு நான்கு பேர் எனப் பிரித்துக்கொண்டோம்.



செய்கை விளையாட்டு



- பூ... பூ... பூத்தது என்று சொல்வேன்;
  பூ பூப்பதுபோல் விரல்களை விரிப்பேன்.

செய்து பழகலாம்

1. பின்தொடர்ந்து படிக்க.



பாடத்தைப் படிக்கக் கேட்டு / ஒலிப்பதிவைக் கேட்டுப் பின்தொடர்ந்து படிக்கலாம்.

KY5AI

2. கதையில் பிடித்த சொற்களை எழுதுக.



என் சொற்கள்

1. _____
2. _____
3. _____
4. _____
5. _____
6. _____

★ சொற்கள்

குறிப்பு

- எழுதிய சொற்களை ஆசிரியரிடம் கூறுக.
- ஒரு சொல்லை ஒருவருக்குமேல் எழுதி இருந்தால் அது ★ சொல்.

3. பாடத்தில் அடிக்கோடிட்டு எழுதுக.



எனக்குப் பிடித்த தொடர் :

_____

4. பேசலாம்.





குறிப்பு

தாங்களே பொறுப்பெடுத்துச் செய்ய நினைக்கும் சிறு சிறு வேலைகள் குறித்துப் பகிரலாம்.

5. படித்து விடை எழுதுக.



படித்தல் பலகை

நாளை	சூழல்	தண்ணீர்	முதல்நாள்
பச்சை	அழகான	மன்னியுங்கள்	மகிழ்ச்சியான
நன்றி	செடிகள்	செல்லலாம்	பூத்துவிட்டது

1. உதவி செய்தவர்களுக்கு நீங்கள் சொல்வது :

2. தெரியாமல் தவறு செய்தால் சொல்வது :

3. வண்ணத்தைக் குறிக்கும் சொல் :

4. பெயரைக் குறிக்கும் சொற்கள் : _____, _____

6. பாடச்சுருக்கம் – படிக்க; விடையளிக்க.

செடிகளின் கோபம்

பள்ளியில் செடிகள் இருந்தன.

ஆசிரியரும் குழந்தைகளும் தண்ணீர் ஊற்றுவர்.

பூக்களைப் பார்க்கக் காத்திருந்தனர்.

ஒருநாள்... திடீரென

ஆசிரியர் ஊருக்குச் சென்றார்.

செடிகளை மறந்தார்.

திரும்பும்போது நினைவு வந்தது.

செடிகளை எண்ணி வருந்தினார்.

செடிகளைச் சென்று பார்த்தார்.

குழந்தைகள், தண்ணீர் ஊற்றி இருந்தனர்.

செடியில் பூவைப் பார்த்து மகிழ்ந்தார்.



செடிகளை நினைத்து வருந்தியது யார்?

அ) ஆசிரியர் ஆ) குழந்தைகள் இ) ஆசிரியரும் குழந்தைகளும்

7. சொல்வதை எழுதுக.

குறிப்பு

படித்தல் பலகையில் உள்ளவற்றைச் சொல்லக்கேட்டு எழுத வேண்டும்.

8. தொடருக்குள் உள்ள உடல் உறுப்பைக் கண்டுபிடிக்க.



செவ்வாய்க்கிழமை வந்தோம்.	வாய்
கைப்பை எடுத்தோம்.	
குளித்தலைக்குச் சென்றோம்.	
கண்காட்சி பார்த்தோம்.	
கால்பந்து வாங்கினோம்.	
பல்லாங்குழி ஆடினோம்.	

9. படிக்க.



முயல் ஓடும் வயல்.
வடை இருக்கும் கடை.
தம்பி பார்க்கும் தும்பி.
சிந்து உருட்டும் பந்து.
அல்லி பறிக்கும் மல்லி.
பள்ளி செல்லும் வள்ளி.

10. வடமொழி எழுத்துகள் அறிவோம்.





குலாப் ஜாமூன் ஜிலேபி ஜாங்கிரி பாதுஷா ரஸகுல்லா

ஜ் ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே ஜை ஜொ ஜோ ஜௌ

ஸ் ஸ ஸா ஸி

ஷ் ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை

ஹ் ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை

ஸ்ரீ

படத்தின் பெயரை எழுதுக.



வடமொழி எழுத்துகளைக் கொண்ட நண்பர்களின் பெயர்களை எழுதுக.

11. கேட்டு விடை கூறுக.

ME2ZJ

ஒரு காட்டில் 'சூரா' என்னும் யானை இருந்தது. யானையைப் பார்த்தால் பல விலங்குகளுக்கு அச்சமாக இருக்கும். ஒருநாள் விளையாடும்போது, யானையின் காலில் அடிபட்டுவிட்டது. மருத்துவம் பார்க்க குரங்கு வந்தது. ஓர் ஊசி போட்டால் சரியாகிவிடும் என்றது. சூரா முகத்தைச் சுளித்தது. ஊசியா? எனக்கு வேண்டாம் என்றது. நீ இப்படியே நடந்தால் வலிக்கும். சற்றுப் பொறுத்துக்கொள் என்றது குரங்கு. முயல், மான், கிளி, அணில் எல்லோரும் சூராவைச் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தன. குரங்கு மெதுவாக ஊசி போட்டது. ஊசி போட்டு முடித்ததும் பொத்தென்று தரையில் உட்கார்ந்தது சூரா. சூராவுக்கு என்ன ஆனது? எல்லா விலங்குகளும் அருகில் ஓடிவந்தன. சூராவை உலுக்கின. சூரா ஒரு கண்ணைத் திறந்தபடி, "ஒன்றுமில்லை; சிறிது பயந்துவிட்டேன்" என்றது. அதைக்கேட்டு அனைத்தும் சிரித்தன. சூராவும் சிரித்தபடி எழுந்து சென்றது.

சூரா யானை ஊசி போட மறுத்தது ஏன்?

12. பேசலாம்: எழுதலாம்.



என்ன வேண்டும்? என்ன வேண்டும்?
பனிக்கூழ் எனக்கு வேண்டும்.

என்னவேண்டும்?என்னவேண்டும்?

_____

என்ன வேண்டும்? என்ன வேண்டும்?
பொம்மைகள் எனக்கு வேண்டும்.

என்னவேண்டும்?என்னவேண்டும்?

_____

13. இரண்டு தொடர்களுக்கும் உரிய படத்தைத் தேர்ந்தெடுக்க.

கடற்கரைக்குப் போகலாம்.

மணல்வீடு கட்டலாம்.







14. பின்பற்றி எழுதுக.



மான் மஞ்சள் வேகமாக ஓட புல்

நான்தான் **மான்**.

எனது நிறம் **மஞ்சள்**.

என்னால் **வேகமாக ஓட** முடியும்.

எனக்குப் **புல்** பிடிக்கும்.



கொக்கு வெள்ளை ஒற்றைக்காலில் நிற்க மீன்

15. நீங்கள் என்ன செய்வீர்கள் ? ✓ செய்க. காரணம் கூறுக.



1. வகுப்பில் ஆசிரியர் இல்லாதபோது நானும் நண்பரும்

அ) பிறருக்கு இடையூறு இல்லாதவாறு பேசுவோம். ☐

ஆ) சத்தமாகப் பேசுவோம். ☐

இ) ஓடி விளையாடுவோம். ☐

2. வீட்டில் பொருள்கள் தரையில் கிடக்கின்றன.

அ) யாரையாவது எடுத்து வைக்கச் சொல்வேன். ☐

ஆ) அப்படியே விட்டுவிடுவேன். ☐

இ) நானே எடுத்து வைப்பேன். ☐

விழுமியம் / வாழ்வியல் திறன்களைப் பெறுவதற்கேற்பக் கலந்துரையாட வேண்டும்.

16. சொல்லிப் பழகுக.





கொழு கொழு குதிரை
கொள்ளு தின்னும் குதிரை

கடலில் எழும் அலை
அலையில் காலை நனை

17. படைப்பு நேரம்.



- **'செடிகளின் கோபம்'** கதையைச் சொந்த மொழிநடையில் சொல்லலாம்.
- குழந்தைகள் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றவில்லை எனில் என்ன ஆகியிருக்கும் என்று கூறலாம்.



18. செயல்திட்டம்.



தோட்டத்தை வரைந்து உருவாக்கலாம். நண்பரிடம் பகிரலாம்.














கற்றல் பயணம்



தேர்ந்தெடுத்து நிரப்புக.

ரோ_____ 

ஜூ / ஜா

_____லேபி 

ஜி / ஷ்

பாது_____ 

ஸ் / ஷா

நான் கற்றவை





1. படக்கதை உணர்த்தும் வாழ்வியல் திறனை அடையாளம்காண முடியும். ☐ ☆☆☆
2. பிறமொழி ஒலிப்பு எழுத்துகளை அறிந்து படிக்க முடியும். ☐ ☆☆☆
3. தொடர்களைப் படித்துப் பொருள்புரிந்து விடை அளிக்க முடியும். ☐ ☆☆☆

குறிப்பு

கற்றுக்கொண்ட திறனுக்கு ✓ செய்ய வேண்டும்.
பெற்ற அடைவுக்கு ஏற்ப வண்ணமிட வேண்டும்.

உரிய படத்தை வரைந்து வண்ணம் தீட்டலாம்.



1



2



3





4



5



திரும்பிப் பார்க்கலாம்



படம் பார்த்துப் பேசுங்கள்.







ஊரின் பெயரில் உள்ள விலங்குகளைக் கண்டுபிடியுங்கள்.

அந்தமான்	மான்
புலியூர்	
ஆடுதுறை	
நரிமேடு	
சிங்கம்புணரி	



படத்திற்கு உரிய பெயரை எடுத்து எழுதுங்கள்.

பூஜா ஸ்ரீ　　ரோஜா　　ஜாங்கிரி　　சுரேஷ்



ரோஜா









தொடர்ந்து உருவாக்கிப் பாடுங்கள்.

மழை மழை பெய்தது.

பூ பூ சிரித்தது.

மழை மழை பெய்தது.

மரம் மரம் சிரித்தது.

மழை மழை பெய்தது...



நானே செய்வேன்



1. கேட்டு விடை கூறுக.

நவீன், பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தான். அம்மா, அலுவலகத்தில் இருந்து இன்னும் வரவில்லை; எதிர்பார்த்துக் காத்திருந்தான். அம்மா வீட்டிற்கு வந்தார். "நான் கேட்டதை வாங்கி வந்துள்ளீர்களா" என்றான் நவீன். இதோ என்று பச்சை வண்ண எழுதுகோலைக் கொடுத்தார் அம்மா. நவீனின் முகம் வாடிவிட்டது. "நான் பொம்மை வைத்த எழுதுகோல்தானே கேட்டேன்" என்றான் நவீன். "நான் வரும் வழியில் உள்ள கடையில் அதுபோல் கிடைக்கவில்லை; பிறகு வாங்கித் தருகிறேன்" என்றார் அம்மா. "இந்த எழுதுகோல் தீரும்போது நான் கேட்டதை வாங்கித் தருவீர்களா?" என்றான் நவீன். "உறுதியாக வாங்கித் தருகிறேன்" என்றார் அம்மா. நவீன், அம்மா தந்த எழுதுகோலை மகிழ்ச்சியுடன் வாங்கிக் கொண்டான்.

நவீன் கேட்ட எழுதுகோல் கிடைக்கவில்லை. கிடைத்த எழுதுகோலை ஏற்றுக் கொண்டான். அதைப் பற்றி உங்கள் கருத்தைக் கூறுக.

2. படித்துக்காட்டுக.



சொல்
ரோஜா
நெல்
மழை

உதவி
ஜிலேபி
கொள்ளு
சுவர்

போகலாம்
விடுமுறை
மின்னல்
வைப்பேன்
சோம்பல்

இருந்தன
மறந்தார்
ஆசிரியர்
நெல்லிக்காய்
மழைக்காலம்

3. படித்து விடை எழுதுக.

1. இரண்டு சொற்களிலும் உள்ள ஒரு சொல் எது? ✓ செய்க.

கல்வி பொங்கல்

பொரி ☐ கல் ☐ கவி ☐

2. விடுபட்ட எழுத்தை எடுத்து எழுதுக.

ஷ் ஜா ஸ ஹ



ர____குல்லா



விக்னே____

3. குறிப்பிற்கு உரிய சொல்லை எடுத்து எழுதுக.

மல்லிகை குதிரை மேசை சிவப்பு

இது ஒரு வண்ணம். _____

இது வேகமாக ஓடும். _____

4. தொடர்களைப் படித்துச் சரியானதை ✓ செய்க.

செடியில் பூ பூத்தது.
அதுதான் முதல் பூ.
அது அழகாகச் சிரித்துக் கொண்டிருந்தது.

செடியில் இப்போது பூ இல்லை. ☐

செடி முன்பே பலமுறை பூத்திருக்கிறது. ☐

செடி இப்போதுதான் பூத்திருக்கிறது. ☐

நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



கெ
ங்கெ
செ
ஞ்செ
டெ
ணெ
தெ
ந்தெ
பெ
மெ
யெ
ரெ
லெ
வெ
ழெ
ளெ
றெ
னெ

வெ நெ ழெ ரெ யெ லெ
றெ ளெ கெ பெ னெ தெ
டெ ஞெ மெ ணெ செ ங்கெ





செடி வெள்ளி தென்றல் வெங்காயம்
வெடி கெண்டி கெளுத்தி சுள்ளெறும்பு
தெரு நெருப்பு செவ்வாய் வெண்ணெய்
பெட்டி வெல்லம் பெருவிரல் மெய்யெழுத்து

பெட்டி
இரும்புப்பெட்டி
சிறிய இரும்புப்பெட்டி
வீட்டில் சிறிய இரும்புப்பெட்டி



நெய் நெய் பசுநெய்.
எலி எலி சுண்டெலி.
மண் மண் செம்மண்.
எறும்பு எறும்பு கட்டெறும்பு.

தென்றல் காற்று வீசியது.
சுண்டெலி ஓடி வந்தது.
செங்கல் வீடு கட்டினான்.
எறும்பு வெல்லம் தின்றது.



நானும் படிப்பேன்; வண்ணமிடுவேன்



கே
நே
சே
ஞே
டே
ணே
தே
நே
பே
மே
யே
ரே
லே
வே
ழே
ளே
றே
னே

மே ஞே டே ணே வே றே
பே னே கே நே தே ளே
சே நே ழே ரே யே லே





வேர் கேணி தேக்கு கேழ்வரகு
தேன் தேநீர் நேற்று பேரிக்காய்
வேலி மேளம் பேருந்து கேட்டேன்
மேலே சேவல் கண்ணே பாடினேன்

வேலி
முள் வேலி
வயலில் முள் வேலி
நெல் வயலில் முள் வேலி



சிட்டு சிட்டு தேன்சிட்டு.
பாலம் பாலம் மேம்பாலம்.
மேகம் மேகம் கருமேகம்.
மரம் மரம் வேப்பமரம்.

கருமேகம் சூழ்ந்தது.
நேரம் பார்த்தேன்.
தேங்காய் வாங்கினார்.
பேருந்தில் செல்லலாம்.



என்னால் முடியும்



கடுகு	மைனா	ரோஜாப்பூ
மிளகு	நாரை	மகிழம்பூ
சீரகம்	காடை	முல்லைப்பூ
ஏலக்காய்	மீன்கொத்தி	தும்பைப்பூ
வெந்தயம்	மரங்கொத்தி	செவ்வந்திப்பூ

அரச மரம்	ஜிலேபி
வேப்ப மரம்	பாதுஷா
பூவரசு மரம்	தேன் மிட்டாய்
புங்கை மரம்	எள்ளுருண்டை
முருங்கை மரம்	பொரி உருண்டை

முகவரி எழுதலாம்.	உடற்பயிற்சி செய்தேன்.
நண்பர் வேண்டும்.	நீங்களும் பாடுங்கள்.
எனது பெயர் குயில்.	நரி துரத்தியது.
வானம் இருண்டது.	வட்டம் வரைந்தான்.
முயல் ஓடும் வயல்.	இடிச் சத்தம் கேட்டது.
அனைத்தும் சிரித்தன.	மணல்வீடு கட்டலாம்.
அதுதான் முதல் பூ.	தேங்காய் பறித்தார்.
கரும்புச்சாறு குடிக்கலாம்.	குலாப் ஜாமூன் வாங்கலாம்.

தமிழ் எழுத்துகள்

ஆய்த எழுத்து ஃ

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

இரண்டாம் பருவக் கற்றல் பயணத்தில்...



STANDARD TWO

TERM - II

ENGLISH



Preface

Language learning becomes meaningful when children connect classroom experiences with the world around them. The Class 2 English Term 2 textbook has been designed to provide joyful and engaging learning experiences that encourage children to observe, explore, interact and communicate with confidence while developing creativity and critical thinking. The following unique features of the textbook will help children use English meaningfully and effectively in familiar and real-life situations.

Unique features of the textbook

Holistic Learning
Integration of motor skills, art, life skills and values

Worksheets
A space for independent practice to enrich language skills

Digital Resources
Audios, Videos and Inclusive books in QR codes

Teacher Support
Teacher notes in the textbook & Detailed description in the Teacher Handbook (THB)

Based on the principle of oracy before literacy and building on the foundations laid in Class 1, the textbook gives importance to the gradual development of language skills - Listening, Speaking, Reading and Writing.

Unique elements to support language learning

Get Set Go!
A warm-up for the lesson

Conversation Time
Language structures & Functional grammar

Peer Talk
Pair and group interaction

Talk Spot
Independent speaking

Reading Race
Accuracy and fluency in reading

My Page
